EASTERN UNIVERSITY
23 AUG 2013
EASTERN UNIVERSITY

# EASTERN UNIVERSITY, SRI LANKA

## FACULTY OF COMMERCE AND MANAGEMENT

## (EXTERNAL DEGREE)

## FIRST EXAMINATION IN BACHELOR OF BUSINESS ADMINISTRATION - 2010/11

## (JUNE, 2013)

## EXB/EXE – 1092 SOCIAL HARMONY AND SRI LANKAN STUDIES

எல்லா வினாக்களுக்கும் விடை தருக. நேரம்: 02 மணித்தியாலம்

---

### Part I

**Q.01. பின்வரும் வினாகளுக்கு விடை தருக.**

1. இலங்கையில் திறந்த பொருளாதாரக் கொள்கை எப்பொழுது அறிமுகப்படுத்தப்பட்டது?
2. இலங்கையின் தற்போதைய சனத்தொகை என்ன?
3. இலங்கையின் மரபு சார் ஏற்றுமதிப் பண்டங்கள் யாவை?
4. இலங்கையின் அதிக உயரமான மலைத்தொடர் எது?
5. இலங்கையில் பெற்றோலியப் படிமங்கள் அடையாளம் காணப்பட்டுள்ள பிரதேசம் எது?
6. இலங்கையின் பரந்த நிலப்பரப்பைக் கொண்ட மாவட்டம் எது?
7. சுதந்திர இலங்கையின் முதலாவது பிரதமமந்திரி யார்?
8. இலங்கையில் எந்த ஆண்டு முதன் முதலாக சர்வசன வாக்குரிமை முறை அறிமுகப்படுத்தப்பட்டது?
9. ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் ஸ்தாபகர் யார்?
10. இலங்கையின் மூன்று புராதன வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களைத் தருக.
11. இலங்கையின் முதலாவது பெருந்தோட்டப் பயிர் யாது?
12. அனுராதபுர இராச்சியத்தின் கடைசித் தமிழ் மன்னன் யார்?
13. “சமூக நல்லுறவு” என்றால் என்ன?
14. சமூக நல்லுறவினால் ஒரு நிறுவனத்திற்கு ஏற்படும் நன்மைகள் எவை?
15. முரண்பாட்டு முகாமைத்துவம் என்பதனால் நீர் விளங்கிக் கொள்வது யாது?

(15x4=60 புள்ளிகள்)

## Part II

**Q.02.**

அ. இலங்கைப் பொருளாதாரத்தில் நெற்பயிர்ச்செய்கைத் துறையின் பொருளாதாரப் பங்களிப்பை விளக்குக. (3 புள்ளிகள்)

ஆ. பெருந்தோட்ட விவசாயத்துறை இன்று எதிர் நோக்கும் பிரதான சவால்கள் யாவை?

(3 புள்ளிகள்)

இ. யுத்தத்துக்குப் பின்னரான இலங்கையில் உல்லாசப்பயணத் துறையின் சாதகமான வாய்ப்புகளைத் தருக. (4புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

**Q.03.**

அ. ஒரு நிறுவனத்தின் முகாமைக்கும் ஊழியர்களுக்கும் இடையே முரண்பாடுகள் தோன்றக்கூடிய பல்வேறு சந்தர்ப்பங்களைப் பட்டியலிடுக.

(03 புள்ளிகள்)

ஆ. “ஒரு நிறுவனத்தில் முரண்பாடுகளை தீர்த்துவைப்பதிலும் பார்க்க முரண்பாடு தோன்றாமல் தவிர்ப்பதுதான் மிகவும் சிறந்தது”. மேற்கூறிய கூற்றினை ஏற்றுக்கொள்கின்றீரா? உதாரணங்களுடன் விபரிக்குக.

(03 புள்ளிகள்)

இ. உமது பல்கலைக்கழகத்தில் மாணவர்களுக்கிடையில் முரண்பாடுகள் தோன்றிய பல்வேறு சந்தர்ப்பங்களை அடயாளப்படுத்தி அவற்றை எவ்வாறு மாணவர்கள் தவிர்த்துக் கொள்ளலாம் அல்லது தீர்த்து வைக்கலாம் என்பது பற்றி ஆலோசனைகள் தருக.

(04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

**Q.04.**

அ. பின்வருவனவற்றுள் யாதாயினும் ஐந்திற்குக் (05) குறிப்புரை எழுதுக.

i. பொருளாதாரத் தாராளமயமாக்கல்

ii. இலங்கையின் உட்கட்டுமான அபிவிருத்திகள்

iii. வேலையின்மைப் பிரச்சினையும் அதன் பொருளாதாரத் தாக்கமும்.

iv. சூழல் மாசடைதலும் பொருளாதார அபிவிருத்தியும்

v. சுதந்திர வர்த்தக வலயமும் வெளிநாட்டு நேரடி முதலீடும்

vi. திவி நெகும (5 x 4 = 20 புள்ளிகள்)